உ

வெளியீடு எண் : 107

திருச்சிற்றம்பலம்

விநாயகர் வழிபாடு

நாற்பத்திரண்டாவது ஆண்டு

நிறைவு விழா வெளியீடு

பொருளுதவி புரவலர்

திருமுறைத் தொண்டர்

திரு. P. மோகன்குமார் அவர்கள்

(புள்ளியியல் துறை, பழநி)

★

பன்னிரு திருமுறை மன்றம்

தெற்காடி வீதி, ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுவரர் கோயில், மதுரை–1.

விநாயகர் வழிபாடு இன்றியமையாதது. அதனை மேற்கொள்ளும் வகையில் விளக்கங்களும், துதிப்பாடல்களும் தொகுக்கப்பெற்று வெளிவருகின்றது. இதனை உதவுபவர் திருமுறைத்தொண்டர் திரு. P. மோகன்குமார் அவர்கள் ஆவார். மன்றப்பாராயணங்களில் பல்லாண்டுகள் பங்குபெற்று வரும் அன்பர். புள்ளியியல் துறையில் பணியாற்றும் இவரும் இவர் குடும்பத்தாரும் எல்லா நலங்களும் பெற்று நீடினிது வாழ அங்கயற்கண்ணியொடும் அமர்ந்தருளும் சொக்கலிங்கப் பெருமானைப் பிரார்த்திக்கிறேன்.

அன்பர்கள் பெற்றுப் பயன் கொள்க!

அன்பன்

10–12–95
மதுரை

நி. சீ. சுந்தரராமன்
செயலர்



விநாயகர் வழிபாடு

விநாயகர்

நாயகர் = தலைவர். விநாயகர் = மேலான தலைவர். தனக்கு மேல் ஒரு தலைவன் இல்லாதவர் என்று பொருள். ' ஓம் அநீஸ்வராய நம: ' என்னும் மந்திரத்திற்கு தனக்கு மேல் ஒரு ஈசுவரன் இல்லாதவர் என்பதே பொருள். ஆதிசங்கரர் தாம் அருளிய கணேச பஞ்சரத்தினத்துள் ' அநாயகைக நாயகம் ' என்று கணபதியைப் போற்றுகின்றார். அநாயக ஏக நாயகம் அதாவது தனக்கு மேலொரு நாயகரில்லாமல் தானே ஏக நாயகனாக இருப்பவர் என்பது இதன் பொருள். வழிபடுவோரின் விக்கினங்களை (இடையூறுகளை)ப் போக்குபவராதலின் விக்னேசுவரர் என்றும், கணங்களுக்குத் தலைவராயிருப்பதால் கணபதி என்றும் இவர் வணங்கப்படுகிறார்.

விநாயகரின் வடிவமும், தத்துவமும் :

விநாயகருடைய வடிவம் விந்தையான வடிவம் யானைத் தலையும், பெரு வயிறும், மனித உடலும், ஐந்து திருக்கைகளும் கூடிய வடிவம். விநாயகருக்கு இடையின் கீழே மனித உடம்பு. இடைக்கு மேல் கழுத்து வரை தேவ உடம்பு. மேலே விலங்கின் தலை (யானைத்தலை) பூதப் பெருவயிறு. ஒரு பக்கம் கொம்பு ஆண்தன்மை. மற்றொரு பக்கம் பெண் தன்மை.

அஃறிணை, உயர்திணை அம்சங்கள்பொருந்திய இந்நிலையை உற்று நோக்கின் விநாயகப் பெருமான் தேவராய், மனிதராய், பூதராய், விலங்காய், ஆணாய், பெண்ணாய், எல்லாமாய்த் திகழ்கிறார் என்பது புலனாகும்.

விநாயகரின் ஐந்து கரங்களில் உள்ளவை

விநாயகருக்கு ஐந்து கரங்கள் உள்ளன. 1. துதிக்கையில் நீர்க்குடம் 2. பின் கை இரண்டிலும் பாசம் அங்குசம், 3. முன் கைகளில் வலக்கையில் ஒடிந்த கொம்பு தந்தம்), இடக்கையில் மோதகம் (அமுத கலசம் என்றும் கூறப்படும்),

பிள்ளையார் சுழியின் பொருள் :

பிள்ளையார் சுழி என்பது அகரம், உகரம், மகரம்(அ,உ,ம) ஆகிய மூன்றும் அடக்கியுள்ள நாத பிரம்மமாகிய ' ஓம் ' என்னும் பிரணவத்தின் ஆரம்ப வடிவம்.

அதிலுள்ள வட்டவடிவம் சிவசக்தி பீடம். கோடு சிவலிங்கம் என்றும் சொல்லப்படும். எழுதத்துவங்கும் முன் பிள்ளையார் சுழியை எழுதுவது, எழுத மேற்கொள்ளும் செயல் இடையூறின்றி முடிய கணபதியை நிறுத்தி வழிபடுவதைப் போன்றதாகும்.

விநாயகர் பஞ்சபூதத் தொடர்புடைய இருக்கை உடையவர்

விநாயகர் இருக்குமிடங்கள் :

1. அரசமரம் — ஆகாயம்
2. வாதநாராயணமரம் — வாயு
3. வன்னிமரம — தேயு (அக்னி)
4. நெல்லிமரம் — அப்பு (நீர்)
5. ஆலமரம் — பிருதிவி (மண்)

விநாயகருக்கு உகந்த பத்திரங்கள் (இலைகள்)

1 முல்லைப் பத்திரம்
2. கரிசிலாங் கண்ணி
3. வில்வபத்திரம்
4. ஊமத்தை இலை
5. இலந்தை இலை
6. வெள்ளறுகம்புல் வேருடன்
7. வன்னி இலை
8. நாயுருவிபத்திரம்
9. கண்டங்கத்திரி இலை
10. அரளி இலை
11. எருக்கிலை
12. மருதை இலை
13. விஷ்ணுகிரந்தி இலை
14. மாதுள இலை
15 தேவதாரு இலை
16. மருவு பத்திரம்
17. அரசு இலை
18. ஜாதிமல்லிகை இலை
19. தாழை இலை
20. அகத்திக்கீரை முதலியன

விநாயகருக்கு அருகம்புல் அர்ச்சனை மிகவும் உகந்ததாகச் சொல்லுவதற்குரிய வரலாறு

ஒருநாள் கைலாய மலையில் பார்வதி பரமசிவனுடன் பிள்ளையார் உட்கார்ந்து கொண்டிருந்தார். அப்பொழுது நந்தியெம் பெருமான் திடீரென்று உள்ளேவந்து பிரபோ தேவேந்திரனும், பிரம்மனும் முப்பத்து முக்கோடி தேவர்களையும் அழைத்துக் கொண்டு தங்களை அவசரமாய் பார்க்க வந்திருக்கிறார்கள் என்றார். பிள்ளையார் அனைவரையும் உள்ளே வரச் சொன்னார். அனைவரும் அமர்ந்ததும், என்ன சமாசாரம் என்று பிரம்மனைக் கேட்டார். பிரம்மா சொன்னார் யானை முகப் பெருமானே, அனலாசுரன் என்ற அசுரன் எல்லோரையும் துன்புறுத்துகிறான். அவனை நெருங்க முடியவில்லை. யார் போனாலும் நெருப்பாகத் தகித்து விடுகிறான். அவனை நீங்கள் தான் அழிக்கவேண்டும். தேவேந்திரனும், நானும் அவன் பக்கத்தில் போகமுடியாமல் ஓடிவந்து விட்டோம் என்றார். பிள்ளையார் உடனே எழுந்தார். அவருடன் கணங்களும் கிளம்பின. அனலாசுரன் இருக்குமிடம் வந்தார். பிள்ளையாருக்கும் அனலாசுரனுக்கும் பெரும் போர் மூண்டது. சண்டையில் அனலாசுரன் தன் வாயிலிருந்து நெருப்பாகக் கக்கி பிள்ளையாரின் படைகளைப் பொசுக்கினான். அதைக் கண்ட பிள்ளையாருக்கு மிகவும் கோபம் வந்துவிட்டது. எத்தனை நேரம் சண்டை செய்தும் அசுரனை வெற்றிபெற

முடியாமல் போகவே அவர் அனலாசுரனைத் தூக்கி அப்படியே விழுங்கிவிட்டார்.

வயிற்றுக்குள்போன அனலாசுரன் சும்மா இருக்க வில்லை. வெப்பமடையச் செய்தான். பிள்ளையார் எரிகிறதே எரிகிறதே என்று குதிக்கத் தொடங்கி விட்டார். அதைக் கண்ட தேவர்கள் குடம் குடமாக கங்கை நீரினால் அவருக்கு அபிஷேகம் செய்தார்கள். ஆனால் எரிச்சல் அதிகம் ஆயிற்றே தவிர குறையவில்லை. பனிக்கட்டியைக் கொண்டு வந்து தலைமீது வைத்தார்கள். அப்பொழுதும் அடங்க வில்லை. அப்பொழுது ஒரு ரிஷி கை நிறைய அறுகம்-புல்லைக் கொண்டு வந்து, பிள்ளையாரின் தலை மீது வைத்தார். உடனே எரிச்சல் அடங்கிவிட்டது. அனலாசுரன் பிள்ளையார் வயிற்றிலேயே ஜீரணம் ஆகிவிட்டான்.

பிள்ளையாருக்குச் சந்தோஷம் தாங்கமுடிய வில்லை. இன்று முதல், என் அருள் வேண்டுபவர்கள் அறுகம்புல்லினால் தான் என்னை அர்ச்சிக்க வேண்டும். அதுவும் இரண்டு அறுகம்புல்லாக எடுத்துப் போடவேண்டும் என்று சொன்னார். அன்று முதல் பிள்ளையாருக்கு அறுகம்புல்லினால் அர்ச்சனை தொடங்கியது. பிள்ளையாருக்கு அறுகம்புல்லினால் அர்ச்சனை செய்தால், நல்ல கல்வியும், செல்வமும், நீண்டஆயுளும் அருள் செய்வார்.

தோப்புக்கரணம் போடுவதால் உடம்பில் ஏற்படும் நன்மைகள்

விநாயகரின் சந்நிதியில் தோப்புக்கரணம்

போடுவதும், நெற்றியில் குட்டிக் கொள்ளுவதும், செய்து வழிபடுவதால் மூலாதாரத்தில் உள்ள குண்டலினி, தட்டி எழுப்பப்பட்டு அதனால் சுழுமுனை நாடி திறந்து கொள்கிறது. நெற்றியில் குட்டிக் கொள்ளுவதால் அங்கே உள்ளடங்கிய அமிர்தகலசம் மேலெழும்பி அதனால் அமிர்தம் உடல் முழுவதும் பரவுகிறது. இதனால் உடம்பில் சுறுசுறுப்பும், உள் எழுச்சியும் உண்டாகிறது. தியானிப்ப தற்கேற்ப மன ஒருமைப்பாடும் இதனால் கிடைக்கிறது.

விநாயகரை வணங்கும் முறையும், தேங்காய் உடைப்பதன் கருத்தும:

முதலில் வலக்கையால் முகத்துக்கு மேலாக இடப்பக்கத்திலும், இடக்கையால் வலப்பக்கத்திலும் தலையில் மூன்று முறை குட்டி, காதுகளைப் பிடித்து தோப்புக்கரணம் இட்டு கணபதியை வணங்க வேண்டும். உருண்டு திரண்ட நம் பாவங்கள் விநாயகர் அருளால் உடைந்து சிதறுவதாக நினைத்து தேங்காயை ஓங்கி அடித்துச் சிதறவிட்டு நம் தீவினைகள் தொலைந்ததாக எண்ண வேண்டும்.

வலம்புரி, இடம்புரி விநாயகர்

விநாயகருடைய துதிக்கை வலப்புறமாக வளைந்திருப்பின் வலம்புரி விநாயகர் என்றும், இடப்புறமாக வளைந்திருப்பின் இடம்புரி விநாயகர் என்றும் அழைக்கிறோம். (வலம்புரியை விசேஷமாகக் கொள்வர்)

விநாயகரின் பதினாறுவகையான பெயர்களும் அவற்றின் வடிவங்களும்

1. பால கணபதி

வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கரும்பு ஆகியவற்றைத் தமது நான்கு கைகளிலும் தரித்துக்கொண்டு ஐந்தாவது கையான துதிக்கையில் மோதகத்தை வைத்துக் கொண்டிருப்பவரும், இளம்பரிதிக்கு நிகரான திருமேனியை உடையவரும், எங்கும் ஒளியுடன் விளங்குபவருமான கணபதியே பாலகணபதி.

2. தருண கணபதி

கயிறு, மாவெட்டி. ஆபபம், விளாம்பழம், நாவல்பழம், ஒற்றைக்கொம்பு, நெற்கதிர், கரும்பு ஆகியவற்றைத் தமது எட்டுக் கைகளிலும் எப்பொழுதும் தரித்துக் கொண்டு, தருண சூரியனை நிகர்த்த காந்தியோடு விளங்கும் ஒப்பற்ற பெருமை வாய்ந்தவர் தருண கணபதி.

3. பக்த கணபதி

தேங்காய், மாம்பழம், வாழைப்பழம், வெல்லத் தாலான பாயசம் நிறைந்த பாத்திரம் ஆகியவற்றைத் தமது நான்கு கைகளிலும் தரித்துக் கொண்டுள்ளவரும் சரத்காலத்தில் தோன்றும் நிறைமதியைப் போன்ற திருமேனியை உடையவரே பக்தகணபதி.

4. வீர கணபதி

வேதாளம், வேல், பாணம், வில், சக்ராயுதம், கத்தி, கேடயம், சம்மட்டி, கதை, மாவெட்டி, நாகம், கயிறு ஆகியவற்றையும், சூலத்தையும், குந்தம், கோடாரி, கொடி என்பவற்றையும் தமது பதினாறு கைகளில் தரித்துக் கொண்டவரும் செந்நிறப் பொலிவுடனும் விளங்குபவரே வீரகணபதி.

5. சக்தி கணபதி

பச்சை நிறம் தோய்ந்த திருமேனியையுடைய தேவியைத் தழுவிய வண்ணம் ஒருவர்க்கொருவர் தழுவிக் கொண்டுள்ள இருப்பையுடையவரும், சந்தியா காலம் போன்ற செந்நிறம் தோயப்பெற்றவரும், கயிறு, மாவெட்டி என்ற இரண்டையும் தம் கைகளில் தரித்துள்ளவரும். அச்சத்தை நீக்குகிற தன்மையும் உடையவரே சக்திகணபதி,

6. த்விஜ கணபதி

புத்தகம், ருத்ராக்ஷமரலை, தண்டம், கமண்டலம் ஆகியவற்றின் சேர்க்கையினால் ஒளிருகின்ற கைகளின் அலங்காரத்தை உடையவராகவும், நான்கு யானை முகம் கொண்டவராகவும் உள்ளவரே த்விஜ கணபதி.

7. ஸித்தி கணபதி

நன்கு பழுத்த மாம்பழம், பூங்கொத்துக்கள்

8. உச்சிஷ்ட கணபதி

குவளை மலர், மாதுளம் பழம், வீணை, நெற் கதிர், கயிறு, ருத்ராஷமாலை ஆகியவற்றை தம்முடைய ஆறு கைகளிலும் முறையே தரித்துக் கொண்டு கரும்பச்சை நிறமுடைய திருமேனியுடன் விளங்குபவரே உச்சிஷ்ட கணபதி.

9. விக்ன கணபதி

சங்கு, கரும்பு, வில், மலர், பாணம், கோடாரி, கயிறு, சக்கரம், தமது கொம்பு, மாவெட்டி, நெற்கதிர், சரம் முதலியவற்றினாலும் பன்னிரெண்டு கைகளிலும் ஆச்ரயித்துள்ள ஆயுதங்களினாலும், சுற்றிலும் விரும்பப் பெற்ற அலங்காரங்களினாலும், மிக்க சோபையோடு விளங்கு கிறவரும், ஸ்வர்ணநிறம் பொருந்திய திருமேனி கொண்ட வருமான விநாயகரே விக்ன கணபதி.

10. க்ஷிப்ர கணபதி

கொம்பு, கற்பகக் கொடி, கயிறு, மாவெட்டி ஆகியவற்றை முறையே தமது நான்கு கைகளிலும் ஐந்தாவதான துதிக்கையில் இரத்தினமிழைத்த தங்க குடத்தையும் வைத்துக் கொண்டு விளங்குபவராய் செம்பருத்திமலரென மனத்தைக் கவரும் காந்தியுடையவரே க்ஷிப்ர கணபதி.

11. ஹேரம்ப கணபதி

இரண்டு கைகளிலும் அபய முத்திரையையும் வரத முத்திரையையும், மற்ற எட்டு கைகளில் முறையே கயிறு, தந்தம், அக்ஷமாலை, மாவெட்டி, கோடாரி, இரும்பாலான உலக்கை, மோதகம், பழம் ஆகியவற்றை தரித்துக் கொண்டு, சிங்கத்தின் மேல் அமர்ந்துள்ள ஐந்து யானை முகங்களை உடையவரே ஹேரம்ப கணபதி.

12. லக்ஷ்மி கணபதி

கிளி, மாதுளம்பழம், மாணிக்க மயமானகுடம், மாவெட்டி, கயிறு, கற்பகக் கொடி, கத்தி ஆகியவற்றினால் ஒளிமயமாகி வெண்ணிறப் பெருக்கையுடையவரும், நீலவர்ண ஆம்பல் மலர்களைக் கையில் கொண்ட இரு தேவியரை அருகில் அமர்த்திக் கொண்டுள்ளவரும் வரம் தரும் கையை உடையவருமானவரே லக்ஷ்மி கணபதி.

13. மஹா கணபதி

சிறந்த யானையின் முகத்தை உடையவரும், சென்னியில் பிறையைச் சூடியவரும், செந்நிறம் தோய்ந்தவரும், முக்கண்ணரும், தமது மடியில் கையில் தாமரை மலருடன் அமர்ந்துள்ள அன்புக்குரிய நாயகியினால் தழுவப் பெற்றவரும், மாதுளை, கதை, கரும்பு, வில் ஒளிதரும் சக்கரம், தாமரைமலர், கயிறு, நெய்தல் நெற்கதிர், தமது

கொம்பு ஆகியவற்றை முறையே பத்து திருக்கரங்களிலும் பதினோறாவது துதிக்கையில் ரத்தின கலசத்தைத் தரித்துக் கொண்டுள்ளவரே மஹா கணபதி.

14. விஜய கணபதி

கயிறு, மாவெட்டி, கொம்பு, மாம்பழம் ஆகியவற்றை உடையவரும்,மூஷிகவாகனத்தைஉடையவரும் செந்நிறம் கொண்டவருமான விஜய விநாயகர் நம்முடைய இடையூறுகள் யாவற்றையும் அழிப்பவர்.

15. நிருத்த கணபதி

பாசம், அங்குசம், அப்பம், உலக்கை, தந்தம் ஆகியவற்றைத் தமது ஐந்து கைகளிலும் தரித்துக்கொண்டு ஆறாவதாக அசைகிற துதிக்கையினால் செய்யப்பெற்றசிறந்த மோதிரம் போல் வளைந்துள்ள நிலையை உடையவரும், மஞ்சள் நிறப் பொலிவுடன் இலங்கும் திருமேனியுடையவரும் நிருத்த என்ற பதத்தைத் துணையாகக் கொண்டவருமான வரே நிருத்த கணபதி.

16. ஊர்த்வ கணபதி

நீலோத்பலம், நெற்கதிர், தாமரைமலர், கரும்பு வில், பாணம், நீண்டதந்தம், கதை ஆகியவற்றை முறையே தமது எட்டுக் கைகளிலும் தரித்துக் கொண்டு பொன்னிறப் பொலிவுடன் இயங்கும் திருமேனி உடையவரும். பச்சை நிறத் திருமேனியுடன் விளங்கும் தேவியோடு தழுவப் பெறுவதற்

விளைவுடன் உயர்த்திய கையை உடையவருமான ஊர்த்நவ கணபதி நமக்கு நல்லது அனைத்தையும் அளிப்பார்.

சங்கடஹர சதுர்த்தி

ஒவ்வொரு மாதத்திலும் பௌர்ணமி கழிந்த நான்காம் நாள் சங்கட ஹரசதுர்த்தி எனப்படும். இந்த நாளில் விநாயகரை வழிபடின் எல்லாச் சங்கடங்களும் நிவிர்த்தியாகும். இந்நாளில் இரவில் 9 மணிக்குமேல் சந்திரனைப் பார்த்த பிறகே விநாயகர் வழிபாடு நடைபெறும் மாசிமாதத்தில் வருவது மஹா சங்கட ஹர சதுர்த்தி எனப்படும். அதுவும் செவ்வாய்க் கிழமையில் பொருந்தி வருமாயின் மிகவும் விசேஷமாகும்.

அரசமரமும் வேம்பும் உள்ள பகுதியில் விநாயகர் ஆலயமிருந்தால் வழிபடும்முறை

ஸ்நானம்செய்து மடியாக, ஆண்கள் விபூதியிட்டு பெண்கள் குங்குமமிட்டு காலை எட்டு மணிக்குள் ஏழு பிரதக்ஷணமாவது செய்ய வேண்டும். எள், வெல்லம், நிவேதனம் செப்பலாம். சனிக்கிழமைகளில் மட்டும் அவசியம் பிரதக்ஷணம் செய்வது நல்லது. காலை எட்டு மணிக்குப் பிறகு அரசமரத்தடிக்குப் போகக் கூடாது.

விநாயகருக்குரிய விரத நாட்கள்

வெள்ளிக்கிழமை, விநாயகசதுர்த்தி, சங்கடஹர சதுர்த்தி ஆகியவை விநாயகருக்குரிய விரத நாட்களாம்.

விநாயகர் வழிபாட்டுக்குரிய துதிகள்

சைவத் திருமுறைகளில் விநாயகர் துதிகள்

திருச்சிற்றம்பலம்

1 பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன், மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே!

—திருஞான சம்பந்தர் தேவாரம்

2 பலபல காமத்த ராகிப் பதைத்தெழு வார்மனத்
துள்ளே
கலமலக் கிட்டுத் திரியும் கணபதி என்னுங் களிறும்
வலமேந் திரண்டு சுடரும் வான்கயி லாய மலையும்
நலமார் கெடிலப் புனலும் உடையார் ஒருவர்
தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவது
மில்லை.

—திருநாவுக்கரசர் தேவாரம்

3 திங்கள் தங்கு சடைகள் மேலோர் திரைகள்
வந்து புரள வீசுங்
கங்கை யாளேல் வாய்திறவ்வாள்;கணப தியேல்
வயிறுதாரி;
அங்கை வேலான் குமரன் பிள்ளை; தேவியார்
கோற்றட்டியாளால்
உங்க ளுக்காள் செய்யமாட்டோம், ஓண காந்தன்
தளியுளீரே.

—சுந்தரர் தேவாரம்

4 திருவாக்கும்;செய்கருமம் கைகூட்டும். செஞ்சொல்
பெருவாக்கும், பீடும் பெருக்கும்; உருவாக்கும்,
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

5 விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம்
தன்மையினால்
கண்ணில் பணிமின் கனிந்து.

—கபிலதேவ நாயனார்

4493
△2,11(பிள்)

6 என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்-
கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான் - புன்னை
விரசுமகிழ் சோலைவியன் நாரையூர் முக்கண்
அரசுமகிழ் அத்திமுகத்தான்.

—நம்பியாண்டார் நம்பிகள்

7 எடுக்கு மாக்கதை இன்தமிழ்ச் செய்யுளாய்
நடக்கு மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடிக்
கடக்க ளிற்றை கருத்துள் இருத்துவாம்.

—சேக்கிழார் அருளிய பெரியபுராணம்

புராணங்களில் உள்ள துதிகள்

1 வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வா
யானைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம்

—சேக்கிழார் நாயனார் புராணம்

2 திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

—கந்தபுராணம்

3 சக்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெய
சுத்தி யாகிய சொற் பொருள் நல்குவ
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே.

—திருவிளையாடற் புராணம்

4 திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்

—விருத்தாசல புராணம்

5 தேவர்தொழு தெழுங்கருணைச் செல்வனே
போற்றி!
சிறந்ததொளிரு மங்கலசொ ரூபனே போற்றி!

ஓவறுசித் திகளனைத்தும் உதவுவோய் போற்
ஒலிகெழு கிண்கிணிபாத சாலநூ புரங்கள்
மேவியொளிர் சரணனே போற்றி! மத தாரை
விரவியதிண் கபோலனே போற்றி! நினதருள
பாவமொடு பல பிணியும் பம்புவறு மைகளும்
பலவான இடர்களையும் பாற்றுகஇன் புறபே

—விநாயக புராண

(இதனை விடியலில் எழும் பொழுது ஓதுகின் வர்கட்கு நோய்கள் வாரா; வறுமைகள் நீங் செல்வம் பெருகும்; எண்ணிய செயல் முற் பெறும்; வினைகள் நீங்கும்; மெய்யுண உண்டாகும்).

வாக்குண்டாம்; நல்லமண முண்டாம்; மாமலர
நோக்குண்டாம்; மேனிநுடங்காது பூக்கொண்
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் கோலஞ்செ
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா.

—ஔவை

அல்லல்போம்; வல்வினைபோம்; அன்னைவயிற்
றில்பிறந்த
தொல்லைபோம்; போகாத் துயரம்போம்; நல்ல
குணமதிக மாம்; அருணைக் கோபுரத்துள் மேவும்
கணபதியைக் கைதொழுதக் கால்.

–தனிப்பாடல்

திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணி
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா!
அத்துயர் அதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கணம் மணமருள் பெருமாளே!

–அருணகிரிநாதர்

உ

திருநெறிய தமிழ்

பன்னிரு திருமுறை பாராயணத் தொகுப்பு நூல் - எண்ணூறு பாடல்கள்; பலன்கள் பல நல்கும் பயனுடைய பதிகங்கள்; பண்முறைபயில்வதற்கும்ஏற்றவாறு திகழ்வது. அபிராமி அந்தாதி மீனாட்சி பிள்ளைத்தமிழ் பாடல்களுடன் வெளிவந்துள்ளது.

விலை : ரூபாய் 20/-

அஞ்சலில் பெற ரூபாய் 21/-

நீ.சி. சுந்தரராமன்

25, பொன்மேனி நாராயணன் தெரு,

S. S. காலனி, மதுரை-625 010.

போன்: 601132.

"உழவாரம்"

சமய இலக்கியத் திங்கள் இதழ்

புரவலர் கட்டணம் ரூ. 1000/-

ஆயுள் கட்டணம் ரூ. 250/-

ஆண்டுக் கட்டணம் ரூ. 25/-

முகவரி :-

"உழவாரம்"

D-89, பாரதியார்தெரு, டோக்நிர்-12,

திருநகர், மதுரை-625 006.

★ அபிராமி அச்சகம், திருநகர் ★ Ph : 8-83085